சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 75/2021

**PW1 ராஜமாணிக்கம்** **09.07.2025**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி பிராம்சரி நோட்டை எழுதிக்கொடுத்த முருகானந்ததின் தாயார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி முருகானந்ததின் மனைவி என்று சொன்னாலும், 3ம் பிரதிவாதி முருகானந்த்தின் மகள் என்று சொன்னால் சரிதான். முருகானந்தத்தை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 2, 3 வருடத்திற்கு முன்பிருந்து தெரியும். முருகானந்தத்தின் சகோதரர் முரளிக்குமார் எனக்கு நண்பர் என்று சொன்னால் சரிதான். அவர் எனக்கு உறவினர் ஆவார். முருகானந்தத்திற்கு என்ன தொழில் என்று கேட்டால் சோலார் பேனல் விற்பனை செய்யும் கடை வைத்திருந்தார். ஆனால் அவர் 2018ல் கடை போட்டார். அவர் பெங்களூரில் வேலை செய்துவிட்டு கோபாலபுரத்தில் வந்து கடை போட்டார். அவர் கோபாலபுரத்தில் எந்த மாதம், எந்த தேதியில் கடை போட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. முருகானந்தம் டெல்லியில் சோலார் கம்பெனியில் GM ஆக இருந்து மாதம் ரூ.2,50,000/- சம்பாதித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரர் அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். சம்பளம் ரூ.1,00,000/- வாங்கி வந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. புரோ நோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் முருகானந்தமும் , முரளிக்குமாரும் எழுதிக்கொடுத்தார்கள். புரோ நோட்டில் எத்தனை ஸ்டாம்புகள் ஒட்டப்பட்டிருந்தது என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. புரோ நோட்டு எழுதிக்கொடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என கேட்டால் நானும், என் மனைவியும் இருந்தோம். யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் முரளிக்குமாரும், அர்ஜீன் ராஜ் ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்தார்கள். புரோ நோட் யார் எழுதினார்கள் என்று கேட்டால் முருகானந்தமும், முரளிக்குமாரும் சேர்ந்து எழுதிக்கொடுத்தார்கள். புரோ நோட்டில் அடித்தல், திருத்தல் இருந்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஸ்டாம்ப், புரோ நோட் யார் வாங்கி வந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. முருகானந்தம்

எப்போது இறந்தார் என்று கேட்டால் 08.11.2018 ம் அன்று இறந்தார். நான் இறந்துபோன நிகழ்விற்கு போயிருந்தேனா என்றால் போயிருந்ததேன். முருகானந்தத்திற்கு இறப்பிற்கு முன்பு எத்தனை மாதம் நோய்வாய் பட்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் இதய நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார். அவர் மருத்துவமனைக்கு சென்ற விவரம் எனக்கு தெரியமா என்றால் தெரியாது. முருகானந்தம் எனக்கு எப்போது புரோ நோட்டை எழுதிக்கொடுத்தார் என்று கேட்டால் 28.10.2018 அன்று எழுதிக்கொடுத்தார் . புரோ நோட் எழுதி கொடுத்துவிட்டு என்னிடம் இருந்து முருகானந்தம் பணம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். 28.10.2018 தேதியிட்ட புரோ நோட் தவிர அவரின் காசோலையோ, வேறு புரோ நோட்டோ உள்ளதா என்றால் இல்லை. 2, 3 பிரதிவாதிகளுக்கும் போக்குவரத்து உண்டா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கும் 2, 3 பிரதிவாதிகளுக்கும் போக்குவரத்து இல்லை என்று சொன்னால் சரிதான். புரோ நோட் முருகானந்தம் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், நானும், முரளிக்குமாரும், 1ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து தயார் செய்த பிராம்சரி நோட் என்றால் அது சரியல்ல. முருகானந்தம் இறப்பதற்கு 2 மாதத்திற்கு முன்பிருந்தே உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றும், அதனால் இறப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு பிராம்சரி நோட் எழுதிக்கொடுத்திருக்க வாய்ப்பில்லை. உண்மையிலேயே பிராம்சரி நோட் எழுதிக்கொடுத்திருந்தால் 2 1/2 வருடங்கள் கழித்து 21.12.2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் அந்த காலகட்டத்தில் பலமுறை பஞ்சாயத்து நடந்தது. அதில் முடிவாகாத காரணத்தினால் தான் அறிவிப்பு அனுப்பப்பட்டது. நான் சொல்வது பொய் என்றும், பிராம்சரி நோட் வழக்கிற்காக 1ம் பிரதிவாதி முருகானந்தத்தின் அண்ணன் நான் சேர்ந்து தயாரித்த பிராம்சரி நோட் என்றால் அது சரியல்ல. 01.07.2022 ம் தேதியில் 2, 3 பிரதிவாதிகள் அவர்களது தோட்டத்தில் அத்துமீறி தேங்காய் போட்டு செல்வதாக பொள்ளாச்சி, தாலூக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். முருகானந்ததின் தாயார் கூறியதன் பேரில் எனக்கு வட்டி வராத காரணத்தினால் தோட்டத்திற்கு சென்று தேங்காய் எடுத்தேன். எவ்வளவு தேங்காய் எடுத்து வட்டிக்கு எவ்வளவு வரவு வைத்தேன் என்றால் 1,500 தேங்காய் எடுத்து ரூ.7,500/- வரவு எடுத்தேன். மேற்கண்ட விவரத்தை பிராதில் குறிப்பிட்டு

கூறியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் என்று சொன்னால் சரிதான். அது **பிவாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டட புகார் இரசீது என்றால் **பிவாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புரோ நோட்டில் உள்ள கையெழுத்தும், என்னிடம் காட்டப்படும் புரோ நோட்டில் உள்ள கையெழுத்தும் ஒன்று தான் என்று சொன்னால் அது சரியல்ல. நான் பூர்த்தி செய்யாதா புரோ நோட்டை தயார் செய்து காவல் நிலையத்தில் காட்டிவிட்டு, பின்னிட்டு அதே பிராம்சரி நோட்டை பூர்த்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை மறுத்து பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஜப்தி மனு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. முருகானந்தத்தின் தாயார் பெயர் சகுந்தலா. முருகானந்தம் அவருடைய சொத்தை பொருத்து 3 ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியும். எத்தனை தடவை முருகானந்தத்தின் தோட்டத்திற்கு சென்று தேங்காய் போட்டேன் என்று கேட்டால் 2 முறை சென்று தேங்காய் போட்டேன். 2 வது முறை தேங்காய் போட்டதற்கு எவ்வளவு கிடைத்தது என்று கேட்டால் 600 காய்களுக்கு ரூ3,000/- கிடைத்தது. முருகானந்தத்தின் தாயார் 1ம் பிரதிவாதி உடன் இருந்தார். அதனை இந்த வழக்கில் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முருகானந்தம் தான் சொத்து முழுவதும் அவரது மகளுக்கு உயில் எழுதி வைத்த நிலையில் நானும், 1 ம் பிரதிவாதியும், முரளிக்குமாரும் சேர்ந்து புரோட் நோட் தாக்கல் செய்து தயார் செய்து இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. முருகானந்தம் எனக்கு புரோ நோட் எழுதிக்கொடுக்க தேவையில்லை என்றும், அவ்வாறு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தற்போது முருகானந்தத்தின் தோட்டத்திற்கு சென்று எத்தனை மரங்கள் வெட்டினேன் என்று கேட்டால் முருகானந்தத்தின் தாயார் சொல்லி 30 தென்னை மரங்களை வெட்டினேன். அந்த தென்னை மரங்களை ஒரு மரத்தை 300 ரூபாய் வீதம் ரூ.9,000/- விற்பனை செய்தேன். அதில் ரூ.7,000/-த்தை 1ம்

பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டேன். மீதமுள்ள தொகையை பொருத்து இந்த வழக்கில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. தாவாப் படி எனக்கு எந்த தொகையும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல. ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் தான் பிராம்சரி நோட்டில் கண்ட விவரங்கள் எனக்குதெரியவில்லை என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி